3

1 APR 1932

உ

கடவுள் துணை.

மிஸ் K. B. சுந்தராம்பாள், S. G. கிட்டப்பா.

S. V. சுப்பையாபாகவதர், T. M. காதர்பாஷா,

இவர்கள் பாடிவரும்

இந்திய முடிசூடா மன்னர்

பண்டித மோதிலால் நேரு

# கிராமபோன் சங்கீதம்

முதற் பாகம்

M. பழனியாண்டி அன் கோ.,

மதுரை புதுமண்டபம், புத்தக வியாபாரம்

மதுரை சி. எம். வி. பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1932. [விலை அணா 2.

0-,1x
N32
120099

வந்து விட்டது! உ வந்து விட்டது!!

# புதிய பக்திரச கீதங்கள்.

---

கவிக்குஞ்சரம் அவர்கள் பாடிய நாட்டுத்திலகம் என்னும் ராட்டுப்பாட்டு விலை அணா 0 5 0

அயன் ராஜப்பார்ட் சங்கீத சரபம் K. P. முகைதீன் அவர்கள் ஆசிரியர் ஆர்மோனியம் T. K. சுந்தரம் அவர்கள் இயற்றிய பக்திரசக்கீர்த்தனை முதல் பாகம் 0 5 0

ஷை இரண்டாம் பாகம் 0 5 0

உபாத்தியாயர் அன்னியில் சங்கீதம் கற்றுக் கொள்ளும் ஆர்மோனிய அநுபவ சங்கீதரத்னம் 1 0 0

சங்கீத வித்வான் அனந்தராம் பாகவதர் அவர்களால் ஸ்வரங்கள் அமைக்கப்பெற்ற தியாகராஜ சங்கீத ஸ்வரஸாகித்யம் விலை ரூ 1 8 0

மேற்கண்ட புத்தகங்களும் மாணவர்களுக்கு வேண்டிய ஸ்கூல் புத்தகங்களும் இன்னும் இதர புராண இதிகாச புத்தகங்களும் எங்களிடம் மொத்தமாகவும் சில்லரையாகவும் நேரிலும் V. P. மூலமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

1911

எமது விலாசம்,

**M. பழனியாண்டி அன் கோ.,**

புத்தக வியாபாரம், புதுமண்டபம்,

**மதுரை.**

784.0954
223
43

உ

பாரதமாதா துணை.

இந்திய முடிசூடா மன்னர்

# பண்டித மோதிலால் நேரு

# கிராமபோன் சங்கீதம்.

---

பண்டித மோதிலால் நேருவின்

பரிதாபப் பாசுரம்

சங்கீத ரத்னம்

மிஸ் K. B. சுந்தராம்பாள் புதிய பிளேட்

தாயிடத்தி லன்பில்லாத என்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான் காபி—தாளம்-ஆதி.

பல்லவி.

பண்டிதமோதிலால் நேரைப் பறிக்கொடுத்தோமே (ப)

அநுபல்லவி.

பறிகொடுத்தோமே நெஞ்சம் பரதவித்தோமே (ப)

சரணம்.

எண்டிசையெல்லாம் புகழ்ந்த ஏழைகளுக்கன்புதந்த
பண்டிதரே யுமதுதேகம் பாகதியாச்சே
பாகதியாச்சே யெங்கள் பலமெல்லாம் போச்சே (ப)

பிப்ரவரி தேதியாறில் பிரபுடீகா வுமதுதேகம்
எப்படி லக்ஷ்மணபுரியில் இறந்த மாயமே
இறந்தமாயமே தர்மம் சிறந்த தியாகமே (ப)

(தொகையரு)

ஆயிரத்தி யெண்ணூற்றி யறுபத்தோருண்டினிலே
யவதரித்த
தூயகுண க்ஷத்ரீக துரை ராஜ சிங்கார
சுகுண சீலா
தாயகத்திலன்பான தனையன் ஜவர்லால் தனக்கு
தரும சேவை
மாயவுடல் தனைநீங்க மகரிஷியாங் காந்திமஹான்
மாரு துக்கம்

ஷை சரணத்தொடர்.

தேவர்களும் உமையழைத்துச் சென்ருரோ மனங்களித்து
பூவுலகோர் வாழவந்த புண்ணிய மூர்த்தி
புண்ணியமூர்த்தி எங்கும் புகழ்பெருங் கீர்த்தி (ப)
தேவருக்குத் துணையிருக்க தேசமதை யாதரிக்க
ஆவலுடன் வரவழைத்த அவசரந்தானே
அவசரந்தானே தெய்வ அம்ஸம் நீர்தானே (ப)

ஷை தொகையரா.

சீக்கிரமா யுத்தமதில் ஜீவனையே கொடுத்துதவி
செய்த செல்வா
பாக்கியநற் பஞ்சாப்பில் பரதவிக்கும் ஏழைகட்குப்
பசிநோய் நீங்க
கேட்பதையன் புடனீந்த கண்ணியனே கர்ணகுல
கிருபா மூர்த்தி
வாக்குறையும் பண்டிதனே வன்மையது ஏடடங்கா
வசனந் தானே.

ஷை சரணத்தொடர்

மனைவி மக்கள் சுற்றமெல்லாம் மாருது சிறையிருந்து
அனைவருக்குந் திடங்கொடுத்த ஆஸ்திகத் யாகா
ஆஸ்திகத்யாகா ஜவர்லால் கீர்த்தி வைபோகா (ப)

ஷை தொகையரா.

கோடிலக்ஷம் ஜனங்களுக்குக் கொடுத்துதவி செய்தருளுங்
கோமான் நின்னைத்

தேடிவரும் இந்தியரைத் திகைத்து மனம் வாடிடவும்
. தீராக் கண்ணீர்

நீடியவுன் அரண்மனையாம் ஆனந்த பவனமது
நிலைத்தே யோங்கி

கூடிவருஞ் சுயராஜ்ய பவனமெனக் கூப்பிடுதே
கொடிகளேந்தி.

ஷை சரணத்தொடர்.

தேசத்தொண்டுக்காப் பிறந்து செல்வமெல்லாந் தானமீந்து
பாசமிகும் பாரதத்தாய் பரமதுர்ப்பாக்யம்
பரமதுர்ப் பாக்யம் .. சட்டம் படித்தோமே வாக்யம் (ப)

---

## மிஸ் K. B. சுந்தராம்பாள் பாடியது.

பல்லவி.

செந்தூர் வேலாண்டி—ஆண்டி திருச் (செ)
சேவை க்ஷேமந்தாண்டி—ஆண்டி திருச் (செ)

அநுபல்லவி.

பந்த பாசங் கடந்தால்
பாவலருண்டு வந்தால்
பரம குருபரன் அறுமுக சரவணன்
திருமலை முருகனு முறையுடனருள் தருஞ் (செ)

மகுடங்கள்.

பரிமளத்துயர் அரிய சொக்கர்மகிழ்
பிரிய முற்ற தொரு உரிய நற் புதல்வன் (செ)
படைத்த பிரமனை யடைத்துச் சிறைதனில்
உரைத்த பிரணவ முகத்தி னகமகிழ் (செ)

சரணம்.

கந்தன் கடம்பன் குகன்
கான வள் ளிதன் லோலன்
கற்பனை தற்பற சாமி சொல்லற்புத
பொற்பத முற்றிய சாமி தமிழ்ப்பெறுஞ் (செ)

---

சங்கீத ரத்னம்

## S. G. கிட்டப்பா பாடிவரும்

### இராகம் கமாஸ் — தாளம் ஆதி.

பல்லவி.

காமி சத்யபாமா கதவைத்திறவாய் (காமி சத்)
திறவாய்
திறவாய்
திறவாய் எந்தன் (காமி சத்)

அநுபல்லவி.

பூமி புகழ் நேயன் புழுதியடைந்த வாயன்
நேமி வசந்தன் நானடி
நானடி
நானடி
நானடி யெந்தன் (காமி சத்)

சரணம்.

அக்ரமங்கள் செய்திடும் அசுரரை யழித்திடும்
சக்ரதரனும் நானடி
நானடி
நானடி யெந்தன் (காமி சத்)

---

சங்கீத ரத்னம்

## S. V. சுப்பையா பாகவதர் பாடியது.

இராகம்-அடாணு—தாளம்-ஆதி.

பல்லவி.

கட்டிக் கரும்பே தேனே
கனியே மோகினி மானே (கட்)

அநுபல்லவி.

அட்டி செய்வதேன் அருள் விழியாளே
ஆருயிர் தர்மந்தன்னை அறிந்த கண்ணாளே
மட்டிலாத பூர்ண மதி முதத்தாளே
மதுரக்குயில் கிளி பத்திடும்
மொழியாளே (கட்)

சரணம்.

பாரி லுனே வணங்கிடும்
ததி சுகு மாரி
இளம் பரங்கு மிகு
வரத நேரில்
என தருமை தெரியாமலே
இனிக் கருணை யுதிக்கும்
தமிழ் பாஸ்கர (கட்)

---

இராகம்- தோடி—தாளம்-ஆதி.

பல்லவி.

சிங்காரி ஒய்யாரி (சிங்)

மகுடங்கள்.

ஜெகத்தை மயக்குமிந்த
முகத்தைப் படைத்திட்ட (சிங்)

சேவை தந் திட வந்த
பூவை யிங் கித பரிமள (சிங்)

சீனியுடன் முக்கனி தேனுங் கலந்தமொழி
யாளு மிவளையினி யானுந் தரிசித்திடத்தக்க (சிங்)

சித்தரு முத்தரும் நித்தம திக்திடும்
உத்த மகத்துவ வித்துவரின (சிங்)

சென்னை-600 00

சரணம்.

பங்கேரு கன்கை தேர்ந்து படைத்திட்ட ராணியாம்
பருவத் திருவுருவில் பாக்யக் கல்யாணியாம்
மங்காத சங்கீதத்தில் மகிமைக்கோர் வேணியாம்
மனதுக் குரிய மயிலாள் இசையமிர்த
வனிதைக் கிசையுங் குயிலாள் இவளையின்று
வஞ்சிக்குந் தென் கூடற் பாஸ்கரன்
சொற்பொரு ளற்புத விற்பனியான (சிங்)

---

சங்கீதராணி மிஸ்

## K. B. சுந்தராம்பாள் பாடிய புதிய பிளேட்

பல்லவி.

ஆலோலமென்று கூவினள் தினைப்புனத்தில்
ஆலோலமென்று கூவினள் பரன்மீதேறி (ஆ)

அனுபல்லவி.

பாலோசுவை சேர் அமுதாலோவகுத் திந்த
பைந்தொடியால் குரலிசை மிக நலமே
இந்து வதனமுள்ள எழில் சோபிதமே (ஆ)

சரணத்தொடர்.

கடசக்கரங்கள் மின்னவே - சொ சொ வெனுஞ்சொல்
கனிவாய் தொடர்ந்தே பள்ளவே
கமல மலரை நிகரும் பழமை நிலவிய
கனகமணி பணிகள் எழிலுடனுலவியே (ஆ)

கதித்தவிணை தானென உவமை
உரைக்கவே தானே என்ன இனிமை
நவனெறிந்து களிசிறந்து மகிழ்வாய்
மனமுவந்து மதிமயங்க விரைவாய் (ஆ)

வடுகக்கன்னடம் மலையாள முதலனேக
மதித்த தேசத்தினிலிவள் போலே
குறித்த மாதைக்கா னேன் கனிவாலெ (ஆ)

---

நாடக சிரோன்மணி விசலூர்

**N. சுப்ரமனிய பாகவதர் பாடிய**

**கிளிக்கண்ணி.**

அஞ்சுவயதினிலே அரியாப் பருவத்திலே
பிஞ்சிலே கூடினேண்டி கிளியே
பிரியமனம் நோகுதடி

எட்டாப்பழமடியோ இரக்காதடுதென்னடியோ
மட்டில்லா ஆனந்தமே கிளியே
மால்மருகன் தந்தசுகம்

எட்டி எட்டிப் பார்ப்பவர்க்கு
எட்ட எட்ட நிற்கு மது
கட்டுக்கடங்காதடி கிளியே
சுந்திரத்தின் பேருருவம்

---

## முடிகொண்டான் M. A. சபாபதி அய்யர் பாடியது

### இராகம்—செஞ்சுருட்டி.

பல்லவி.

சிதம்பரம் போகாமல் இருப்பேனு
நான் ஜென்மத்தை வீணுகக்கெடுப்பேனு (சித)

பக்தியும் மனமும் பொருந்தின தங்கே
சத்தியம் சொன்னேன் சடலமுமிங்கே (சித)

ஆசையும் நேசமும் ஆனந்தம் அங்கே
பேசலும் பிதற்றலும் பாசமும் இங்கே (சித)

---

### சங்கீத ரத்னம்

## S. V. சுப்பையா பாகவதர் பாடியது.

பல்லவி.

காதலின் பாக்யம் கதிதரும் யோக்யம்
காணுவாய் இன்பமே சிலாக்யம்
பெரியோர் வாக்யம் (கா)

அனுபல்லவி.

ஆதலி னுலென்னை யாதரிப்பாய் கண்ணே (கா)

சரணம்

பேதலிக்காதே யுன்னைப் பிரிந்திடேன் சத்தியமிதே
பேசு மதன யோக பூஜிதஞ் செய்வோ மதை
ஈடிலாப் பாஸ்கரன் சொல்
தேவியே யென்னுவியே (கா

பல்லவி.

ஏ நிலம் புனங்காக்கும் வள்ளி
எழில் என்ன சொல்லுவேன் (ஏ)

அனுபல்லவி.

மீனலோசனி பாலனுன மவனுவனுக்காய் ஜனித்து
சாலவுறக் காய் மதித்து (ஏ)

சரணம்.

அஞ்சுகந் தன் குலமென் றிவள்
அருங்குரல் கேட்டு வருகுதே
அடர் வனத்திலுள்ள மானினங்கள்
அக்கண்ணைக் கண்டு முருகுதே
மிஞ்சும் சௌந்தர்யம் பெருகுதே
வெற்றிக்குகனை யுருதிங்கு
கத்திக் குரல் சோர வருகுதே (ஏ)

---

சங்கீத ரத்னம்.

## S. V. சுப்பையா பாகவதர் பாடியது.

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ரூபகம்.

சொல்லும் வார்த்தையைக் கேளம்மா
தள்ளாதே சும்மா (சொ)
அல்லும் பகலுமிந்த அவஸ்தையை நீ விடுத்து
அவனியில்தொழிலற்று இருப்பாய் நீ செவிகொடுத்து (சொ)

சரணம்.

உனக்காகவே நான் சொன்னேன்
ஒஹோ யிந்த க்ஷணமே
மனக்கவலை கொள்ளாதே
மாநிலத் தியல்பு நான் (சொ)
வேறொரு வருக்காக
வேண்டுவ தில்லையம்மா
ஆறுமுக கனே சொந்த
ஆசைம ணாளனம்மா (சொ)

---

வித்வசிகாமணி

## S. V. சுப்பையா பாகவதர் பாடியது.

## திருப்புகழ்.

பக்கரை விசித்ரமணி பொற்கலனை யிட்டநடை
பட்சியெனு முக்ரவுர—கமுநீப
பக்குவமலர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள் கை—வடிவேலும்
திக்கது மதிக்கவருங் குக்குடமும் ரக்ஷை தரு
சிற்றடியு முற்றிய பன்—னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பன வெனக்கருள் கை—மறவேனே.

---

சங்கீத ரத்னம்

## S. V. சுப்பையா பாகவதர் பாடிவரும்

பல்லவி.

நாளைக்கி நாளைக்கென்றே
நாளும் கழியுது
ஞான சபை யெண்ணில்
ஆனந்தம் பொழியுது
வேளைக் குதவி செய்ய
வெறுக்கில மளியுது
விரைச்சா நதிக்
கரைச்சா

என்னைக் கார் நிதியே
ஒன்னைக் கார் நிதியே
என்னைக் கார் நிதியே

நிதியே சபா பதியே—இது
ததியே பசு பதியே
நீயே கதியே—அப்பனே
நீயே கதியே—அய்யனே
நீயே கதியே—அத்தனே
நீயே கதியே—
கதியே நீயே கதியே—என்னை
நீ கார் நிதியே (நா)

சங்கீத ரத்னம்

## S. V. சுப்பையா பாகவதர் பாடியது.

இராகம்-சங்கராபரணம்—தாளம்-ரூபகம்.

பல்லவி.

மஹிம தெலிய தரமா நீ (மஹி)
மஹினி நீ க்ருப விஷே (மஹி)

அநுபல்லவி.

மஹிஹா ஸுருகி னணசிள
மூதர்ம ஸம்வர்த்தினி நீ (மஹி)

சரணம்.

வேத சாஸ்த்ரமுலு சதிவி
வாதமுசாய நேர்ச்சி
கேதமுலு தீர்ச்சுசு
பேதமைன பக்தி கல்கக (மஹி)
யாகம்பு ஜேஸி யஷ்ட
யோகம்புலு ஸாதிஞ்சின
ராகம்பு பேனி அனு
ராகமைன பக்தி கல்கக (மஹி)
உமாதாஸு டனுசு நாம
குமாகௌஸசி யுல்லமலா
குமாருனிகன்ன ஒகரி
குமாரி தர்மஸம் வர்த்தனி நீ (மஹி)

நாடகராணி

## மிஸ். K. B. சுந்தராம்பாள் பாடியது

கலித்துறை.

ஆலோலமென்று குரல்காட்டி இந்த அரும்புனத்தே
சேலோடுகண்ணே தினைமீதுவைத்த சிங்காரிதன்னை
மாலோடுகாதல் மனையாட்டியாகவே இவளைக்கொண்டால்
பாலோடுசேர்ந்த பழம்போலினித்திடும் பண்புரவே.

(இராகம் கல்யாணி—தாளம் ஆதி.)

பல்லவி.

ஆயலோட்டும் பெண்ணே பெண்ணே
ஆயலோட்டும் பெண்ணே பெண்ணே (ஆய)

அநுபல்லவி.

ஆவியே ஆருயிர் சஞ்சீவியே மன்மதனென்னும்
பாவியே மலர்க்கணையே தூவியே
வாட்டுகிறான் கண்ணே ஆயலோட்டும் பெண்ணே (ஆய)

சரணங்கள்.

பாயுந்தென்றலாலே அடி பாயுந்தென்றலாலே
பாயுந்தென்றலாலே பாங்கியே
பாங்கியே மெத்தவும் மனம் சோங்கியே
பங்கய மோகனுங்கியே மனத்துயரம் ஓங்கியே
மலர்க்கணையே தூவியே வாட்டுகிறான் கண்ணே (ஆய)

முதற்பாகம் முற்றிற்று.

இதன் தொடர்ச்சி 2, 3, 4 பாகம் அவசியம் பார்க்கவும்.

புக் 1-க்கு [விலை அணா 2.